# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخـبـر


தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

1-A

اَللّٰهُمَّ إِنِّي أُشْهِدُكَ وَأُشْهِدُ مَلَائِكَتَكَ وَحَمَلَةَ عَرْشِكَ، وَأُشْهِدُ مَنْ فِي السَّمَاوَاتِ وَمَنْ فِي الْأَرْضِ، أَنَّكَ أَنْتَ اللهُ لَا إِلَهَ إِلَّا أَنْتَ وَحْدَكَ لَا شَرِيكَ لَكَ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُكَ وَرَسُولُكَ

அல்லாஹும்ம இன்னீ உஷ்ஹிதுக வஉஷ்ஹிது மலாஇகதக வஹமலத அர்ஷிக வஉஷ்ஹிது மன் பீ(ف)ஸ்ஸமாவா(த்)தி வமன் பி(ف)ல் அர்ழி(ض) அன்னக அன்தல்லாஹு லா இலாஹ இல்லா அந்த வஹ்தக லா ஷரீக லக வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துக வரஸூலுக

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா(ரலி) அவர்கள், ஹாகிம் 1920

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

1-B

யா அல்லாஹ்! நிச்சயமாக நீ தான் அல்லாஹ். வணக்கத்திற்கு உரியவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை, நீ தனித்தவன், உனக்கு எந்த ஒரு இணையுமில்லை என்பதற்கு உன்னையும், உனது மலக்குகளையும், உனது அர்ஷை சுமக்கும் மலக்குகளையும், வானங்களில் பூமியிலுள்ளவர்களையும், சாட்சியாக ஆக்குகின்றேன். நிச்சயமாக முஹம்மத்(ﷺ) அவர்கள் உனது அடியாரும், தூதரும் என சாட்சி கூறுகிறேன்.

## சிறப்பு

யார் இந்தப் பிரார்த்தனையை மூன்று முறை ஓதுவாரோ அல்லாஹ் அவரை நரகை விட்டு விடுதலை செய்கிறான் என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா(ரலி) அவர்கள், ஹாகிம் 1920

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

2-A

(ஒரு பயணத்தில் வாகனமொன்றில்) நபி(ﷺ) அவர்களுக்குப் பின்னால் முஆத் (ரலி) அவர்கள் அமர்ந்திருந்தபோது, நபி(ﷺ) அவர்கள் “முஆத் பின் ஜபலே!” என்று அழைத்தார்கள். “அல்லாஹ்வின் தூதரே! இதோ கீழ்ப்படியக் காத்திருக்கிறேன் (கூறுங்கள்)” என்று முஆத் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

"முஆதே!' என (மீண்டும்) நபி(ﷺ) அவர்கள் அழைத்தார்கள். “அல்லாஹ்வின் தூதரே! இதோ கீழ்ப்படியக் காத்திருக்கிறேன் (கூறுங்கள்)” என (மீண்டும்) முஆத் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக்(ரலி) அவர்கள், புஹாரி 128

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

2-B

இவ்வாறு மூன்று முறை (அழைப்பும் பதிலும்) நடந்தது. பிறகு நபி (ﷺ) அவர்கள்,

أَشْهَدُ أَنْ لاَّ إِلَهَ إِلاَّ اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ

அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ்
வஅன்ன முஹமத்தர் ரஸூலுல்லாஹ்

“அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்றும், முஹம்மத் (ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்றும் உளப்பூர்வமாக உறுதிகூறும் எவருக்கும் அல்லாஹ் நரகத்தைத் தடை செய்யாமல் இருப்பதில்லை” என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக்(ரலி) அவர்கள், புஹாரி 128

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

3

## அல்லாஹ்வின் அன்பை நாடி

لَا إِلَهَ إِلاَّ اللهُ

லா இலாஹ இல்லல்லாஹ்

“வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை” என்று யார் சொன்னாரோ அவர்மீது அல்லாஹ் நரகத்தைத் தடை செய்துவிட்டான் என்று நபி அவர்கள் கூறினார்கள்

அறிவிப்பாளர்: இத்பான் இப்னு மாலிக்(ரலி) அவர்கள், இப்னுமாஜஹ் 425

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

4-A

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

அபூஹுரைரா (ரலி) அவர்கள் மற்றும் அபூ ஸயீத் (ரலி) அவர்கள் ஆகியோர், அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் (பின்வருமாறு) கூறியதாக சாட்சி பகர்ந்தார்கள்:

لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَاللَّهُ أَكْبَرُ

லா இலாஹ இல்லல்லாஹு வஅல்லாஹு அக்பர்

ஒரு அடியார், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அல்லாஹ் மிகப் பெரியவன் என்று கூறினால், கண்ணியமும் மகத்துவமும் மிக்க அல்லாஹ் கூறுகிறான்,
'என் அடியான் உண்மையே கூறினான்,
என்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை,
நான் மிகப் பெரியவன்.'

அறிவிப்பாளர்: அபூ இஸ்ஹாக்(ரலி) அவர்கள், இப்னுமாஜஹ் 3794

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

4-B

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ

லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு

ஒரு அடியார்,வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன் என்று கூறினால், அல்லாஹ் கூறுகிறான், 'என் அடியான் உண்மையே கூறினான், என்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, நான் தனித்தவன்.'

لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ لاَ شَرِيكَ لَهُ

லா இலாஹ இல்லல்லாஹு லா ஷரீ(க்)க லஹு

ஒரு அடியார், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவனுக்கு இணையேதும் இல்லை என்று கூறினால், அல்லாஹ் கூறுகிறான், 'என் அடியான் உண்மையே கூறினான், என்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, எனக்கு இணையேதும் இல்லை.'

அறிவிப்பாளர்: அபூ இஸ்ஹாக்(ரலி) அவர்கள், இப்னுமாஜஹ் 3794

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

4-C

لاَ إِلَهَ إِلاَّ اللهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ

லா இலாஹ இல்லல்லாஹு

லஹுல் முல்கு வ லஹுல் ஹம்து

ஒரு அடியார், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது, புகழனைத்தும் அவனுக்கே உரியது என்று கூறினால், அல்லாஹ் கூறுகிறான்,

'என் அடியான் உண்மையே கூறினான்,

என்னைத் தவிர வணக்கத்திற்குரியவன்

வேறு யாருமில்லை, ஆட்சியதிகாரம் எனக்கே உரியது,

புகழனைத்தும் எனக்கே உரியது.'

அறிவிப்பாளர்: அபூ இஸ்ஹாக்(ரலி) அவர்கள், இப்னுமாஜஹ் 3794

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

4-D

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَلاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ

லா இலாஹ இல்லல்லாஹு வலா ஹவ்ல வலா குவ்வ(த்)த இல்லா பில்லாஹ்

ஒரு அடியார், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அல்லாஹ்வைக் கொண்டன்றி வேறு எந்தச் சக்தியும் வலிமையும் இல்லை என்று கூறினால், அல்லாஹ் கூறுகிறான், 'என் அடியான் உண்மையே கூறினான், என்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, என்னைக் கொண்டன்றி வேறு எந்தச் சக்தியும் வலிமையும் இல்லை.'"

அறிவிப்பாளர் அபூ இஸ்ஹாக் அவர்கள் கூறினார்கள்: "பிறகு அவர்கள் எனக்குப் புரியாத ஒன்றைச் சொன்னார்கள். நான் அபூ ஜஃபர் அவர்களிடம், 'அவர் என்ன சொன்னார்?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'எவருக்கு மரண வேளையில் இவை (இந்த வார்த்தைகள்) பாக்கியமாக வழங்கப்படுகிறதோ அவரை நரகம் தீண்டாது' என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர்: அபூ இஸ்ஹாக்(ரலி) அவர்கள், இப்னுமாஜஹ் 3794

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

5-A

## நரக நெருப்பிலிருந்து உங்களைக் காத்துக்கொள்ளும் கேடயம்

سُبْحَانَ اللهِ

اَلْحَمْدُ لِلّٰهِ

لَا إِلَهَ إِلَّا اللهُ

اَللهُ أَكْبَرُ

சுப்ஹானல்லாஹ்

அல்ஹம்துலில்லாஹ்

லா இலாஹ இல்லல்லாஹ்

அல்லாஹு அக்பர்

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா(ரலி) ஸுனனுல் குப்ரா அந்ஸாயி 10684

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

5-B

அல்லாஹ் தூய்மையானவன்

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை

அல்லாஹ் மிகப் பெரியவன்

என்று கூறுங்கள். ஏனெனில், இந்த வார்த்தைகள் மறுமை நாளில் (நன்மைகளுடன்) முன்னால் வந்து, பின்னால் தொடர்ந்து வந்து, உங்களைச் சூழ்ந்து பாதுகாக்கும். மேலும், இவையே நிலையான நற்செயல்களாகும்" என்று நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா(ரலி) ஸுனனுல் குப்ரா அந்ஸாயி 10684

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

6

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

யார் தமது உள்ளத்தில் ஒரு வாற்கோதுமையின் அளவு நன்மை இருக்கும் நிலையில், لَا إِلَهَ إِلَّا اللهُ "லா இலாஹ இல்லல்லாஹ்" (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை) என்று சொன்னாரோ அவர் நரகத்திலிருந்து வெளியேறிவிடுவார்.

யார் தமது உள்ளத்தில் ஒரு மணிக்கோதுமையின் அளவு நன்மை இருக்கும் நிலையில், لَا إِلَهَ إِلَّا اللهُ "லா இலாஹ இல்லல்லாஹ்" சொன்னாரோ அவரும் நரகத்திலிருந்து வெளியேறிவிடுவார்.

யார் தமது உள்ளத்தில் ஓர் அணுவளவு நன்மை இருக்கும் நிலையில், لَا إِلَهَ إِلَّا اللهُ "லா இலாஹ இல்லல்லாஹ்" சொன்னாரோ அவரும் நரகத்திலிருந்து வெளியேறிவிடுவார்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், புஹாரி 44

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

7-A

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اَللّٰهُ أَكْبَرُ

اَلْحَمْدُ لِلّٰهِ

لَا إِلَٰهَ إِلَّا اللّٰهُ

سُبْحَانَ اللّٰهِ

اَسْتَغْفِرُ اللّٰه

அல்லாஹு அக்பர்

அல்ஹம்துலில்லாஹ்

லா இலாஹ இல்லல்லாஹ்

சுப்ஹானல்லாஹ்

அஸ்தஃபி(ف)ருல்லாஹ்

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1833

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

7-B

அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்:

ஒரு விஷயம் (சொல்கிறேன்) ஆதமின் மக்களில் ஒவ்வொரு மனிதரும் முன்னூற்று அறுபது மூட்டு எலும்புகளுடன் படைக்கப்பட்டுள்ளார்கள். எனவே, யார் அந்த முன்னூற்று அறுபது மூட்டு எலும்புகளின் எண்ணிக்கை அளவிற்கு அல்லாஹ்வைப் பெருமைப்படுத்தி (தக்பீர்), அல்லாஹ்வைப் புகழ்ந்து (தஹ்மீத்), அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்று (ஏகத்துவ உறுதி) கூறி, அல்லாஹ்வைத் துதித்து (தஸ்பீஹ்), அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி (இஸ்திஃக்ஃபார்), மக்களின் நடைபாதையில் (இடையூறாகக்) கிடந்த ஒரு கல்லையோ அல்லது முள்ளையோ அல்லது எலும்பையோ அகற்றி, நல்லதை ஏவி, அல்லது தீமையைத் தடுத்(து நல்லறங்கள் புரிந்)தாரோ அவர் அன்றைய தினத்தில் தம்மை நரக நெருப்பிலிருந்து அப்புறப்படுத்திவிட்ட நிலையிலேயே நடமாடுகிறார்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1833

# நரகை விட்டு காக்கும் சிறப்பான வார்த்தைகள்

8

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

அல்லாஹ்வின் தூதர்(ﷺ)அவர்கள் அதிகாலைப் பொழுது விடிந்ததும் எதிரிகள் மீது திடீர் தாக்குதல் நடத்துவார்கள். அப்போது பாங்கு (அதான்) ஒலிப்பதைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். பாங்கு ஒலியைக் கேட்டால் தாக்குதலை நிறுத்திக்கொள்வார்கள், பாங்கு ஒலியைக் கேட்காவிட்டால் தாக்குதலை நடத்துவார்கள்.

ஒருமுறை, ஒரு மனிதர் "அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்" என்று கூறுவதை அவர்கள் கேட்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள், "அவர் இயற்கையான இஸ்லாமிய மார்க்கத்தில் இருக்கிறார்" என்று கூறினார்கள்.

பின்னர் அந்த மனிதர், "அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ், அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்" என்று கூறினார். அப்போது அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள், "அவர் நரக நெருப்பிலிருந்து விடுபட்டுவிட்டார்" என்று கூறினார்கள்.

பின்னர் மக்கள் சென்று பார்த்தபோது, அவர் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த ஓர் ஆடு மேய்ப்பவராக இருந்தார்.

அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள், ஸஹீஹ் முஸ்லிம் 382